செ.வெ.எண்:75 நாள்:29.11.2018

# கரூர் மாவட்டம்
# சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை
# பெண் குழந்தைக்கான மாநில விருது அறிவிப்பு

தமிழக அரசு, சமூகநலம் சத்துணவு திட்டத்துறை மூலம் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும், பாடுபட்டு வீரதீர செயல் புரிந்து வரும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளை சிறப்பிக்கும் முகமாக அதற்கான மாநில விருது ஒன்றை அறிவித்து அரசாணை பிறப்பித்து கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இதன்படி வருடந்தோறும் மேற்குறிப்பிட்டவாறு சேவை புரிந்து வரும் சிறந்த குழந்தை ஒருவருக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) பாராட்டு பத்திரமும், ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த 10ஆம் வகுப்பு படிக்கும் செல்வி.ந.நந்தினி, என்ற சிறுமிக்கு, அவர் தனக்கு நடக்கவிருந்த குழந்தைதத் திருமணத்தை துணிச்சலுடன் போராடி நிறுத்தியமைக்காக, கடந்த 24.01.2018 அன்று ஒரு இலட்ச ரூபாய்க்கான காசோலையும், பாராட்டு பத்திரமும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

அதே போன்று, வருகிற ஜனவரி 2019ல் தேசிய பெண் குழந்தை தினத்தில் மாநில விருது வழங்கிட 18 வயதிற்குட்பட்ட (31 டிசம்பர் 2018ன் படி) மேற்குறிப்பிட்டவாறு தகுதியான பெண் குழந்தைகளிடமிருந்து விண்ணப்பங்கள் 15.12.2018 வரை வரவேற்கப்படுகின்றன.

விருதிற்கான விண்ணப்பங்கள் தலைமையாசிரியர் மற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்/ மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்/ மாவட்ட திட்ட அலுவலர்(ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்)/ காவல் துறை / தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் வாயிலாக உரிய முன் மொழிவுகளுடன் மாவட்ட சமூகநல அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பங்கள் கூர்ந்தாய்வு செய்து, மாவட்ட ஆட்சியர் பரிந்துரையுடன் சமூகநல ஆணையரகத்திற்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்படும். மாவட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மாநில அளவில் தேர்வு குழு மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, அனைத்து தகுதிகள் பெற்ற ஒரு பெண் குழந்தை தேர்வு செய்யப்பட்டு 24.01.2019 அன்று மாநில விருது வழங்கப்படும்.

**தகுதிகள்**

1) 5வயதிற்கு மேல் 18 வயதிற்குட்பட்ட தமிழகத்தில் வசிக்கும் பெண் குழந்தை (டிசம்பர்31- ன்படி)

2) கீழ்காணும் வீர தீர செயல் புரிந்திருக்க வேண்டும்.

பெண் கல்வி, பெண் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு, பெண் குழந்தை திருமணத்தை தடுத்தல், வேறு ஏதாவது வகையில் சிறப்பான / தனித்துவமான சாதனை செய்திருத்தல், சமூக அவலங்கள் மற்றும் அதனை தீர்வு காண்பதற்கு புத்தகங்கள் மற்றும் கையேடுகள் எழுதி வெளியிட்டிருத்தல், ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியும் என்பது போன்ற செயல்களை பெண்களாலும் சாதிக்க முடியும் என்று சாதித்திருத்தல்.

**விருது**

மாநிலத்தில் ஒவ்வொரு வருடமும் மேற்காண் அம்சங்களில் சிறந்து விளங்கும் ஒரு பெண் குழந்தை தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு பாராட்டு பத்திரம், ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலை வழங்கப்படும்.

**தேர்வுக்குழு**

மாநில அளவிலான தேர்வுக் குழு மூலம் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களை கூர்ந்தாய்ந்து மேற்காண் விருதினை பெற உரிய நபர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

**விருதிற்கான முன்மொழிவுகள்**

மேற்காண் விருதினை பெற உரிய முன்மொழிவுகளை முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கினைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், காவல் துறை மற்றும் குழந்தைகளுக்காக பணிபுரியும் சிறந்த தொண்டு நிறுவனங்கள் ஆகியோர்களிடம் விபரமறிந்து பரிந்துரைக்கலாம்.

பரிந்துரையில் குழந்தையின் பெயர், தாய்/தந்தை முகவரி, ஆதார் எண், புகைப்படம், ஆகியவற்றுடன் குழந்தை ஆற்றிய அசாதாரண வீர, தீர செயல் மற்றும் சாதனைகள் ஆகியவற்றின் ஒரு பக்கத்திற்கு மிகாத குறிப்பு மற்றும் அதற்கான ஆதாரங்கள் இணைக்கப்பட வேண்டும்.

**பரிந்துரைக்கான காலம்**

டிசம்பர் 15ஆம் தேதிக்குள் உரிய பரிந்துரைகள் அனுப்பப்பட வேண்டும்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**